**டிசம்பர் – 19**

# TNPSC துளிகள்

- அதானி பசுமை ஆற்றல் லிமிடெட் என்ற நிறுவனமானது 4,667 MW பசுமை ஆற்றலை வழங்குவதற்கு வேண்டி இந்திய சூரிய சக்திக் கழகத்துடன் ஒரு கொள்முதல் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
  - இது உலகின் மிகப்பெரிய பசுமை மின் ஆற்றல் கொள்முதல் ஒப்பந்தமாகும்.
- இந்தியாவின் TVS மோட்டார் நிறுவனமானது இந்தியாவிலுள்ள BMW மோட்டார் சைக்கிள் நிறுவனத்துடன் இணைந்து மின்சார வாகனங்களைத் தயாரிக்க உள்ளது.
  - Ola Electric மற்றும் Ather போன்ற புதிய யுகத்தின் புத்தாக்க நிறுவனங்கள் மின்சார வாகனங்களில் தங்களது முதலீட்டை அதிகரித்து வரும் நிலையில் இந்தக் கூட்டணியானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- புதுடெல்லியிலுள்ள மேஜர் தயான் சந்த் தேசிய மைதானத்தில் நடைபெற உள்ள முதலாவது தேசிய அளவிலான கேலோ இந்தியா மகளிர் ஹாக்கி போட்டியினை ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாகூர் அதிகாரப் பூர்வமாக தொடங்கி வைத்தார்.
  - இந்திய விளையாட்டுத் துறை ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா ஆகியவை இணைந்து இந்த முதலாவது தேசிய அளவிலான கேலோ இந்தியா போட்டியினை நடத்துகின்றன.
- மகாராஷ்டிராவில் மாட்டு வண்டிப் பந்தயத்தினை மீண்டும் தொடங்குவதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
  - இந்தப் பந்தயங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் தடை செய்யப் பட்டிருந்தன.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு மாநிலப் பாடல்

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை

- தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலைத் தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- இப்பாடல் கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில்

பாடப் படும் போது மாற்றுத் திறனாளிகள் தவிர அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

# தேசியச் செய்திகள்

## அனைத்திந்திய மாநகராட்சித் தலைவர் மாநாடு




- வாரணாசியில் நடைபெற உள்ள அனைத்திந்திய மாநகராட்சித் தலைவர் மாநாட்டினை (All-India Mayor's Conference) பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.
- உத்தரப் பிரதேசத்தின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையானது இந்த மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- 100 நகரங்களுக்கும் மேற்பட்ட நகரங்களின் மாநகராட்சித் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

## பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனா





- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழு 2021-26 ஆகிய ஆண்டுகளுக்கு பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனா எனும் திட்டத்தினை அமல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியது.
- இத்திட்டத்தின் ஒரு அங்கமாக விரைவுப் படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் திட்டம், நீர்

நிலை மேம்பாடு மற்றும் ஹர்கேத் கோ பானி போன்ற கூறுகள் 2021-26 ஆகிய காலக் கட்டத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

- இத்திட்டமானது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## அணுசக்தி உலைகள்





- பிரான்சு நாட்டின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் ஆறு அணு மின் உலைகளை அமைப்பதற்கு இந்திய அரசானது ஒரு கொள்கைசார் ஒப்புதலை வழங்கியுள்ளது.
- மகாராஷ்டிராவின் ஜைத்தாபூர் என்னுமிடத்தில் அணுசக்தி உலைகளை அமைக்கச் செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- இது அதனை இந்தியாவின் மிகப்பெரிய அணுசக்தி உற்பத்தி தளமாக மாற்றச் செய்யும்.
- உள்நாட்டு மேம்பாடு மற்றும் இறக்குமதி மாற்றீடுகள் போன்றவற்றிற்கான வேளாண் திட்டம் மற்றும் சுகாதாரச் சேவைகள் போன்ற துறைகளில் அணுசக்திப் பயன்பாட்டை இந்தியாவில் ஊக்குவிப்பதற்கான அனைத்து உத்வேகத்தினையும் அதற்காக இந்திய அரசு வழங்க உள்ளது.

## பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயது

- பெண்களின் திருமண வயதை 18 வயதிலிருந்து 21 வயதாக உயர்த்துவதற்கான ஒரு முன்மொழிதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போது ஆண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 21 ஆகவும் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 18 ஆகவும் உள்ளது.
- இதனை நடைமுறைப் படுத்துவதற்காக வேண்டி குழந்தை திருமண தடைச் சட்டம்

2006, சிறப்புத் திருமணச் சட்டம் 1954 மற்றும் இந்து திருமணச் சட்டம் 1955 ஆகியவற்றில் திருத்தம் கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளது.





## இயற்கை விவசாயம் மீதான தேசிய மாநாடு




- இயற்கை விவசாயம் மீதான தேசிய மாநாட்டின் போது, பிரதமர் நரேந்திர மோடி நாட்டின் விவசாயிகள் மத்தியில் உரையாற்றினார்.
- இந்த மாநாட்டில் விவசாயிகள் மத்தியில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடுவது பற்றியும் இதன் நன்மைகள் பற்றிய தகவல்கள் குறித்தும் எடுத்துரைக்கப்படும்.

- 3 நாட்கள் அளவிலான இந்த மாநாடு குஜராத்தின் ஆனந்த் மாவட்டத்தில் நடத்தப் படுகிறது.

## அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் குறியீடு



**THE TOPPERS**

| | | Score |
|---|---|---|
| Large states (10) | Bengal | 58.9 |
| Small states (11) | Kerala | 67.9 |
| UTs | Lakshadweep | 52.6 |
| NE states | Mizoram | 51.6 |

**Bengal Underperformed In**
- Schools with internet and computers
- Primary schools per lakh population
- Primary drop-out rates

**Bengal Overperformed In**
- More schools with drinking water, toilets and hand-wash facilities
- Percentage of teachers for primary education
- Infant mortality rate (IMR)
- Net Enrolment Ratio (NER) at primary level for girls

- அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் குறியீட்டில் பெரிய மாநிலம் என்ற பிரிவில் மேற்கு வங்காளம் முதலிடத்தில் உள்ளது.
- போட்டித்திறன் கல்வி நிறுவனமானது இந்த குறியீட்டினைத் தயாரித்துள்ளது.
- இந்தக் குறியீடானது 10 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எழுத்தறிவு மீதான ஒரு குறி காட்டி ஆகும்.
- பெரிய மாநிலங்கள் பிரிவில், பீகார் கடைசி இடத்தில் உள்ளது.
- ‘சிறிய மாநிலங்கள்’ பிரிவில் கேரளா முதலிடத்தில் உள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலமானது மிக மோசமான மதிப்பைப் பெற்றது.
- வடகிழக்கு மாநிலப் பிரிவில் மிசோரம் முதலிடத்தைப் பெற்றது
- வடகிழக்கு மாநிலப் பிரிவில் அருணாச்சலப் பிரதேசம் கடைசி இடத்தைப் பெற்றது.
- ஒன்றியப் பிரதேசங்கள் பிரிவில் லட்சத்தீவு முதலிடத்தைப் பெற்றது.
- ஒன்றியப் பிரதேசங்கள் பிரிவில், லடாக் கடைசி இடத்தைப் பெற்றுள்ளது.
- 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட மாநிலங்கள் 28.05 என்ற தேசியச் சராசரிக்கும் கீழான மதிப்பினைப் பெற்றுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## இரண்டாம் கிம் ஜாங்கின் 10 ஆம் ஆண்டு நினைவு தினம்

- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 17 முதல் 11 நாட்களுக்கு தனது குடிமக்கள் சிரிப்பதற்கும், மது அருந்துவதற்கும், மளிகைப் பொருட்கள் வாங்குவதற்கும் வட கொரிய அரசு தடை விதித்துள்ளது.

- வடகொரிய அரசு அதிகாரிகள் தமது குடிமக்களுக்கு மகிழ்ச்சியின் அறிகுறிகளை எதுவும் வெளிப்படுத்த வேண்டாம் என உத்தரவிட்டுள்ளனர்.
- முன்னாள் தலைவர் இரண்டாம் கிம் ஜாங்கின் 10 ஆம் ஆண்டு நினைவு தினத்தின் ஒரு அங்கமாக இந்த உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.




### ஜீமோ வடிசாறு (சூப்)




- யுனெஸ்கோ அமைப்பானது "ஜீமோ வடிசாறு" எனப்படும் ஹைத்தி நாட்டின் ஒரு சூப் வகையினை தனது மகத்தான தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரிய பட்டியலில் சேர்த்துள்ளது.
- ஹைத்தி சூப் (வடிசாறு) சுதந்திரத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது.
- ஹைத்தி மக்கள் சூப் அருந்துவதன் மூலம் தங்களது சுதந்திரத்தைக் கொண்டாடுவர்.
- அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டதன் நினைவாக புத்தாண்டுத் தினத்தில் பாரம்பரியமாக அம்மக்கள் இந்த சூப் வகையைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### குமார மங்கலம் பிர்லா

- அமெரிக்காவின் சிலிகான் பள்ளத்தாக்குப் பகுதியில் அமைந்துள்ள Indus Entrepreneurs

(TiE) என்ற நிறுவனமானது வணிகப் பரிமாற்றங்களில் ஆண்டின் சிறந்த உலகளாவிய தொழில்முனைவராக குமார மங்கலம் பிர்லாவினை அறிவித்துள்ளது.

- இதன் மூலம் இந்த விருதினைப் பெற்ற முதல் இந்தியத் தொழிலதிபர் என்ற ஒரு பெருமையினை பிர்லா பெற்றுள்ளனர்.
- பெருந்தொற்றுக் காலங்களில் இந்தக் குழுமத்தில் அவர் ஆற்றிய அசாதாரணப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.
- துபாயில் நடைபெற்ற Indus Entrepreneurs உலக உச்சி மாநாட்டு விருது விழாவில் இந்த விருதானது அவருக்கு வழங்கப்பட்டது.




## பூடானின் உயரிய குடிமை விருது




- பூடான் அரசு தனது உயரியக் குடிமை விருதான நகடாக் பெல்கி கோர்லோ விருதினை பிரதமர் மோடி அவர்களுக்கு வழங்கி கௌரவித்துள்ளது.
- பூடானின் பிரதமர் லோட்டாய் செரிங் பூடானின் உயரிய விருதிற்கு பிரதமர் மோடி அவர்களின் பெயரை அறிவித்தார்.

- பூடான் அரசுடன் இந்தியா நட்புறவுடன் நடந்து கொண்டதற்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையில் இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இது பல்வேறு அரசுகளினால் மோடிக்கு வழங்கப் பட்ட 10வது சர்வதேச விருதாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## டைம்ஸ் இதழின் 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த தடகள வீரர் – சிமோன் பைல்ஸ்

- டைம்ஸ் இதழானது 2021 ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீரராக அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ் என்பவரை அறிவித்தது.
- உலகின் மிகவும் புகழ்பெற்ற ஜிம்னாஸ்ட் வல்லுநரும், 4 முறை ஒலிம்பிக் பதக்கம் வென்றவருமான இவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் நான்கு இறுதிப் போட்டிகளில் இருந்து விலகி தனது மன ஆரோக்கியத்திற்கு மிகுந்த முன்னுரிமை அளித்ததற்காக பாராட்டப் பட்டார்.
- பின்னடைவிற்குப் பிறகும், 24 வயதான இவர் டோக்கியோ போட்டிகளில் ஆல் ரவுண்ட் பிரிவில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.




## SIFI விருதுகள்

| Award | Winner |
|---|---|
| SJFI Sportsman of the year 2021 | Neeraj Chopra (Javelin) |
| SJFI Sportswoman of the year 2021 | Mirabai Chanu (Weightlifting) |
| SJFI Team of the Year 2021 | Indian Men's Hockey team |
| SJFI Parathletes of the year 2021(Men) | Pramod Bhagat (Badminton) and Sum it Antil (Javelin) |
| SJFI Parathletes of the year 2021(Wom en) | Avani Lekhara (rifle shooter) |
| SJFI Special Recognition Award | Olympic Gold Quest (OGQ) |

- இந்திய விளையாட்டுத் துறை பத்திரிக்கைக் கூட்டமைப்பானது இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் கிரிக்கெட் உரை வழங்குநருமான சுனில் மனோகர்

கவாஸ்கருக்கு தனது மதிப்புமிக்க “SJFI பதக்கத்தினை” (2021) வழங்க முடிவு செய்து உள்ளது.

- இந்தப் பதக்கமானது இந்திய விளையாட்டுத் துறை பத்திரிகையாளர் கூட்டமைப்பின் உயரிய விருதாகும்.
- இந்தக் கூட்டமைப்பானது மேற்கு வங்காளத்தின் கல்கத்தாவில் (தற்போதைய கொல்கத்தா) உள்ள ஈடன் கார்டன் எனுமிடத்தில் 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 அன்று நிறுவப் பட்டது.

# முக்கிய தினங்கள்

## பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் – டிசம்பர் 17

- உலகம் முழுவதும் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராக இழைக்கப்படும் வெறுக்கத் தக்க குற்றங்கள் மீது உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக இத்தினமானது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- பாகுபாடுகளுக்கு எதிராக ஒன்றிணைவதற்கும் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுவதற்கும் வேண்டி பாலியல் தொழிலாளர்களுக்கு இத்தினமானது வாய்ப்பினை அளிக்கிறது.
- “சிவப்புக் குடை” என்பது உலகெங்கிலும் உள்ள பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்கான சின்னமாகும்.
- 2005 ஆம் ஆண்டில் ஐரோப்பாவிலுள்ள பாலியல் தொழிலாளர் உரிமைகள் மீதான சர்வதேசக் குழுவானது சிவப்புக் குடையினை பாலியல் தொழிலாளர் உரிமைகளுக்கான சின்னமாக ஏற்றுக் கொண்டது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★